செய்திப் பணிப்பாளர் /செய்தி ஆசிரியர் 23.10.2017

**செய்தி வெளியீடு**

**தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் (அடிப்படை 2013=100) : செத்தெம்பர் 2017**

**தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்**

**தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு**

தொலைபேசி: 011-2147414 தொலைநகல்: 011-2877945 மின்னஞ்சல் prices@statistics.gov.lk

2017 செத்தெம்பர் மாதத்திற்கான தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்(தே.நு.வி.சு.) பற்றிய அறிக்கையை வெளியிடுகையில் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி அமர சதரசிங்க அவர்கள், தே.நு.வி.சு.அடிப்படையான புள்ளிக்கு புள்ளி பணவீக்கமானது 2017 செத்தெம்பர் மாதத்தில் 8.6% ஆக கணிப்பிடப்பட்டுள்ளது என தெரிவித்தார். 2017 ஆகஸ்ட் மாதத்தில் 7.9% இருந்து. 2016 செத்தெம்பர் மாதத்தில் ஒப்பீட்டளவில் நிலவிய குறைந்த விலை மட்டங்களே பணவீக்கத்தில் அதிகரிப்பு பதிவாகியமைக்கான பிரதான காரணமாகும். 2017 செத்தெம்பர் மாதத்திற்கான உணவு மற்றும் உணவல்லாப் பிரிவுகளிலிருந்து பணவீக்கத்திற்கான பங்களிப்புகள் முறையே 6.1%, 2.6% ஆக இருந்த அதேவேளை, 2016 செத்தெம்பர் மாதத்தில் உணவு விலைகளில் ஒப்பீட்டுரீதியாக நிலவிய குறைந்த விலைகளை பிரதிபலிக்கும் வகையில் 2016 செத்தெம்பர் மாதத்தில் பணவீக்கத்திற்கான இந்த இரு பிரிவுகளிலினதும் பங்களிப்புகள் முறையே 2.1%, 2.7% ஆக காணப்பட்டன.

இருப்பினும், தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்(தே.நு.வி.சு.) மாதம் மீது மாத மாற்றங்களை ஒப்பிடுகையில் 2017 ஆகஸ்ட் மாதத்தில் பதிவாகிய 122.3 இருந்து 2017 செத்தெம்பர் மாதத்தில் 123.3 ஆக அதிகரித்துள்ளது. இது, 2017 ஆகஸ்ட் மாதத்துடன் ஒப்பிடுகையில் 2017 செத்தெம்பர் மாதத்தில் 1.0 சுட்டெண் புள்ளி அல்லது 0.8 சதவீத புள்ளி அதிகரிப்பொன்றைக் காட்டுகிறது. இந்த மாதாந்த மாற்றத்திற்கான காரணம், உணவுப்பொருட்களின் செலவுப் பெறுமதி 0.80% இனாலும் உணவல்லாப்பொருட்களின் செலவுப் பெறுமதி 0.07%இனாலும் அதிகரித்தமையேயாகும்.

உணவுப்பொருட்களின் செலவுப் பெறுமதியின் அதிகரிப்புக்குக் காரணம் அரிசி, தேங்காய், சின்ன வெங்காயம், பெரிய வெங்காயம், சீனி, எலுமிச்சம்பழம், வாழைப்பழம் மற்றும் பப்பாசிப்பழம் ஆகியவற்றின் விலைகள் அதிகரித்தமையேயாகும். எனினும், சுட்டெண்ணில் குறைந்த செலவுப் பெறுமதிகள் மரக்கறி, புதிய மீன், மைசூர் பருப்பு, பச்சை மிளகாய் மற்றும் வெள்ளைப்பூடு என்பன பொருட்டு பதிவாகின.

முந்திய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2017 செத்தெம்பர் மாதத்தில் உணவல்லாப்பொருட்களின் செலவுப் பெறுமதியின் அதிகரிப்புக்குக் காரணம், ‘அற்ககோல் பானங்கள், புகையிலை மற்றும் தியக்கமருந்துகள்’, ‘கல்வி’, ‘ஆடையும் காலணியும்’, ‘நானாவிதப் பொருட்களும் சேவைகளும்’, ‘தளபாடம், குடித்தன உபகரணம் மற்றும் வழமையான குடித்தன பராமரிப்பு’ ஆகிய பிரிவுகளில் ஏற்பட்ட செலவுப் பெறுமதியின் அதிகரிப்பேயாகும். மேலும், முந்திய மாதத்துடன் ஒப்பிடுகையில் ‘வீடமைப்பு, நீர், மின்வலு, எரிவாயு, ஏனைய எரிபொருள்கள்’ பிரிவு பொருட்டு செலவுப் பெறுமதியில் ஓரளவு சற்று அதிகரிப்பு பதிவாகியது. எனினும், 2017 செத்தெம்பர் மாதம் 01ஆம் திகதியிலிருந்து செயல்வலுப்பெறும் வகையில் இணையக் கட்டணங்கள் மீதான தொலைத்தொடர்பு அறவீடு நீக்கப்பட்டமை காரணமாக ‘தொடர்பாடல்’ பிரிவு பொருட்டான செலவுப் பெறுமதியில் குறைவு அவதானிக்கப்பட்டது. ‘சுகாதாரம்’, ‘போக்குவரத்து’, ‘பொழுதுபோக்கும் கலாசாரமும்’ மற்றும் ‘உணவகமும் ஹோட்டல்களும்’ ஆகிய பிரிவுகளின் செலவுப் பெறுமதியில் இம்மாதம் மாற்றம் எதுவும் காணப்படவில்லை.




**தே.நு.வி.சு. இன் அசைவுகள் (அடிப்படை : 2013 = 100)**

| வருடம் | மாதம் | சுட்டெண் | சுட்டெண்ணிற்கான மாதத்திற்கு மாதம் % மாற்றம் | புள்ளிக்கு புள்ளி பணவீக்க% |
|---|---|---|---|---|
| **2016** | **செப்ரெம்பர்** | 113.5 | 0.2 | 4.7 |
| | **ஒக்ரோபர்** | 114.7 | 1.1 | 5.0 |
| | **நவம்பர்** | 116.6 | 1.7 | 4.1 |
| | **டிசம்பர்** | 118.0 | 1.2 | 4.2 |
| **2017** | **ஜனவரி** | 119.3 | 1.1 | 6.5 |
| | **பெப்ரவரி** | 119.9 | 0.5 | 8.2 |
| | **மார்ச்** | 119.5 | -0.3 | 8.6 |
| | **ஏப்ரல்** | 121.0 | 1.3 | 8.4 |
| | **மே** | 121.8 | 0.7 | 7.1 |
| | **யூன்** | 123.4 | 1.3 | 6.3 |
| | **யூலை** | 122.4 | -0.8 | 6.3 |
| | **ஓகஸ்ட்** | 122.3 | -0.1 | 7.9 |
| | **செப்ரெம்பர்** | 123.3 | 0.8 | 8.6 |

தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம்